**தலைப்பு 143 - பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 யூலை 31 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டிணைத் திட்டமிடல், அமுல்ப்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) முதல் (உ) பந்தி வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 இலிருந்து 1.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

அமைச்சால் 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்

### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 425,000,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதிவரையும் அதில் ரூபா 422,824,244 பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க தேறிய ஏற்பாடுகளிலிருந்து ரூபா 2,175,756 அதாவது 0.51 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

**2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டுவருபவை | 373,000,000 | 372,884,684 | 115,316 | 0.03 |
| மூலதனம் | 52,000,000 | 49,939,560 | 2,060,440 | 3.96 |
| மொத்தம் | 425,000,000 | 422,824,244 | 2,175,756 | 0.51 |

**(ii) பாதீட்டு முரண்**

4 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 5 சதவீதத்திலிருந்து 55 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உயர் எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உயர் எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 14301 | 6,000,000 | 2,938,460 | 2,000,000 | 3,690,538 | 21,500,000 | 8,324,796 |

**(ஈ) கட்டுநிதிக் கணக்குகள்**

அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதியின் கூட்டுத்தொகை ரூபா 662,322 ஆகக் காணப்பட்டது.

**(உ) பொது வைப்புக் கணக்குகள்**

---

அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதி ரூபா 1,237,884 ஆகக் காணப்பட்டது.

## 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 13,605,454 ஆக இருந்ததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| 01 ஆண்டிற்குக் குறைவானவை | 01 ஆண்டிற்கு மேற்பட்ட 03 ஆண்டுகளுக்கு குறைவானவை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா |
| 10,343,228 | 3,262,226 | 13,605,454 |

## 1.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| நிதிப்பிரமாணம் 1646 | அமைச்சிற்கு உரித்தான குழு வாகனத்திற்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) சனாதிபதி செயலகச் சுற்றறிக்கை** | |
| 2010 மே 14 ஆம் திகதிய சீஎஸ்/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | கௌரவ அமைச்சர்களின் நுகர்விற்காகவும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கப்படக்கூடிய ஆகக் கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 3 ஆகக் காணப்பட்ட போதிலும் இதற்கு இணங்காத வகையில் அமைச்சருக்காக 4 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. |

## 1.6 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 08 | 06 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 38 | 30 | 08 |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 17 | 03 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | - | - |
| | மொத்தம் | 69 | 54 | 15 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.